# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## FIRST YEAR EXAMINATIONS IN BACHELOR OF ARTS (EXTERNAL) – 2008 / 2009

## HELD IN APRIL – 2009

## GGY 1.11 – FUNDAMENTALS OF ENVIRONMENTAL GEOGRAPHY

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக. உலகப் புறவுருவப்படம் வழங்கப்படும்.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. (அ) புவிக்கோளுக்கும் ஏனைய கோள்களுக்கும் இடையிலான ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்க.

    (ஆ) சூரிய குடும்பம் பற்றிய தற்காலக் கருத்துக்களை விமர்சிக்குக.

02. (அ) புவியியல் நோக்கில் சூழல் தொகுதி (Eco-System) என்றால் என்ன?

    (ஆ) சூழல் தொகுதிக்குள் நடைபெறும் நேரடி, மறைமுக தொழிற்பாட்டினை உதாரணங்கள் மூலம் தெளிவாக பரிசீலிக்குக.

03. (அ) எரிமலைகளின் வகைகளை உதாரணத்துடன் தருக.

    (ஆ) எரிமலை வலயங்களை உலகப் புறவுருவப் படத்தில் வரைந்து காட்டுக.

    (இ) எரிமலை வெடிப்பினால் சூழற்தொகுதிக்குக் கிடைக்கப்பெறும் சாதக, பாதகங்களை நுணுக்கமாக ஆராய்க.

04. (அ) மூன்றாம் வகை நிலவுருவங்கள் என்றால் என்ன?

    (ஆ) மூன்றாம் வகை நிலவுருவங்களை உருவாக்கும் காரணிகளை பட்டியல் படுத்துக.

    (இ) மேற்படி காரணிகளுள் ஏதாவது ஒன்றினால் தோற்றம் பெறும் நிலவுருவங்களை வரைபடங்களின் உதவியுடன் விபரிக்குக.

05. (அ) ஞாயிற்றுக் கதிர் வீசலுக்கும் காலநிலைக்கும் இடையிலான தொடர்புகளை நுணுக்கமாக ஆராய்க.

    (ஆ) காலநிலை – தாவரங்கள் இவற்றில் எது எதில் செல்வாக்கு செலுத்துகிறது? விமர்சிக்குக.

06. (அ) வளிமண்டல கட்டமைப்பில் வெப்பநிலை, அமுக்கம் மற்றும் அடர்த்தி ஆகியவற்றின் போக்கை வரைபடத்தின் மூலம் விளக்குக.

(ஆ) மனிதனுக்கு வளிமண்டலம் எங்ஙனம் தொண்டுகளுடையதாக இருக்கின்றது என்பதை விபரிக்குக.

07. (அ) இலங்கையின் பிரதான பௌதீக அம்சங்களை ஒழுங்குபடுத்துக.

(ஆ) அவ் அம்சங்கள் மீது மனிதன் எவ்வகையில் செல்வாக்குச் செலுத்துகின்றான் என்பதை சுருக்கமாக விளக்குக.

(இ) தற்காலத்தில் நிகழ்வது சூழல் ஆதிக்க வாதமா அல்லது மானிட ஆதிக்க வாதமா? விமர்சிக்குக.

08. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு மாத்திரம் சிறுகுறிப்பு எழுதுக.

(i) உள்நாட்டு யுத்தமும் இயற்கை வளங்களும்
(ii) மானிடப் பெருக்கம் சூழல் இடையூறுக் காரணியா?
(iii) பாறை வட்டக் கொள்கை
(iv) இலங்கையின் காலநிலையைக் கட்டுப்படுத்தும் காரணிகள்

***